# தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவம்

எண்.100 அண்ணா சாலை, கிண்டி, சென்னை–600 032.
தொலைபேசி: 044–22201337
மின்னஞ்சல் முகவரி: ombudsmanlocal@tn.gov.in

தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவர், சென்னை–600 032
முன்னிலை: முனைவர் சோ. அய்யர், இ.ஆ.ப., (ஓ).
*************

**முறையீட்டு மனு எண் 686/2016/பே.2**

**ஆணை எண் 260 /2017/ நாள் – 23–11–2017**

**12.07.2016ம் நாளிட்ட "தினமலர்" நாளிதழ் செய்தி** — முறைமன்ற நடுவம் தாமாகவே முன்வந்து முறையீடாக பதிவு செய்தது

**செயல் அலுவலர்,**
பொன்னேரி தேர்வு நிலை பேரூராட்சி,
திருவள்ளூர் மாவட்டம். --- எதிர் மனுதாரர்.

**ஆணை**

திருவள்ளூர் மாவட்டம், பொன்னேரி பேரூராட்சியில் 12.07.2016ம் நாளிட்ட "தினமலர்" நாளிதழில் பொன்னேரி பாதாள சாக்கடை திட்டம் அறிவிக்கப்பட்டு ஐந்து ஆண்டுகள் முடிந்தன என்னும் தலைப்பில் வெளியிடப்பட்ட செய்தியினை இம்முறைமன்றம் தாமாக முன்வந்து விசரிக்க முடிவு செய்து இதனை முறையீடாக (686/2016) பதிவு செய்தது. இப்பொருள் தொடர்பாக பேரூராட்சி செயல் அலுவலரிடம் பெறப்பட்ட அறிக்கைகள் பரிசீலிக்கப்பட்டு கீழ்கண்டவாறு ஆணையிடப்படுகிறது.

இப்பொருள் குறித்து இம்முறைமன்ற நடுவ அறிவிப்பாணை எண் 686/2016/பே.2 நாள் 12.04.2016 மற்றும் 22.08.2016 ஆகிய தேதிகளில் மேற்படி செய்திக்கான விளக்க அறிக்கை கோரி பேரூராட்சி செயல் அலுவலர், பொன்னேரி தேர்வு நிலை பேரூராட்சிக்கு ஆணையிடப்பட்டது.

மேற்படி அறிவிப்பாணைக்கு திருவள்ளூர் மாவட்டம், பொன்னேரி தேர்வு நிலை பேரூராட்சி செயல் அலுவலர் தனது கடித எண் 407/2017/அ.1/நாள் 30.08.2017ல் தனது அறிக்கையினை கீழ்கண்டவாறு சமர்ப்பித்துள்ளார்.

பொன்னேரி தேர்வு நிலை பேரூராட்சியில் பாதாள சாக்கடைத் திட்டதிற்காக 51.236 கி.மீ நீளத்திற்கு குழாய்கள் பதிக்கவும், 1,870 மனித நுழைத் தொட்டிகள் வைக்கவும் 8,531 இணைப்புகள் (குடியிருப்பு மற்றும் வணிகம்) அமைக்கவும், 65.82 லட்சம் லிட்டர் திறனுள்ள கழிவு நீர் சுத்திகரிப்பு நிலையம் அமைக்கவும் மற்றும் கழிவு நீர் உந்து நிலையம் அமைக்க கீழ்கண்ட இடங்கள் தேர்வு செய்யப்பட்டதாகவும் தனது அறிக்கையில் தெரிவித்துள்ளார்.

| பகுதி | பயன்பாடு | தேர்வு செய்யப்பட்டுள்ள இடம் | சர்வே எண் | இடத்தின் அளவு | தேவைப் படும் அளவு | நிலத்தின் வகைபாடு |
|---|---|---|---|---|---|---|
| பகுதி.4. | கழிவு நீர் சேகரிக்கும் நிலையம். | பஞ்செட்டி ரோடு | **244/5** | **0.31 ஏக்கர்** | **0.31** ஏக்கர் | கிராமநத்தம் புறம்போக்கு |
| பகுதி.3 | கழிவு நீர் சேகரிக்கும் நிலையம் | வேண்பாக்கம் பள்ளம் | **548/1** | **1.00 ஏக்கர்** | 0.30 ஏக்கர் | கிராம நத்தம் புறம்போக்கு |
| பகுதி.2 | கழிவு நீர் சேகரிக்கும் நிலையம் | கள்ளுக்கடை மேடு | **399/1** | 0.82 ஏக்கர் | **0.30 ஏக்கர்** | கிராம நத்தம் புறம்போக்கு |
| பகுதி.1 | கழிவு நீர் சேகரிக்கும் நிலையம் | சின்னக்காவணம் (தீயணைப்பு நிலையம் அருகில்) | 179/2 மற்றும் 3 | **8 ஏக்கர்** | 0.30 ஏக்கர் | கிராம நத்தம் புறம்போக்கு |
| **பகுதி.1ஏ** | கழிவு நீர் சேகரிக்கும் நிலையம் | பெரியகாவணம் | **68/25** | 0.25 ஏக்கர் | 0.21 ஏக்கர் | கிராம நத்தம் புறம்போக்கு |
| | கழிவு நீர் சேகரிக்கும் நிலையம் | சின்னகாவணம் (பின்பகுதி) | 179/2 | 8 ஏக்கர் | 2.00 ஏக்கர் | கிராம நத்தம் புறம்போக்கு |

மேற்கண்டவாறு கழிவு நீர் சுத்திகரிப்பு நிலையம் அமைக்க தேர்வு செய்யப்பட்ட இடங்களில் சர்வே எண் 179/6 . B.1. 6 B2 ல் உள்ள இடத்தில் கழிவு நீர் சுத்திகரிப்பு நிலையம் அமைக்கக்கூடாது என சென்னை உயர்நீதி மன்றத்தில் திரு இராஜமாணிக்கம் என்பவரால் வழக்கு எண். W.P.No.26554/2012 தொடரப்பட்டதை தொடர்ந்து மேற்படி பணிக்கு சென்னை உயர் நீதி மன்றத்தால் இரண்டு வார காலம் இடைக்கால தடை விதித்து ஆணையிடப்பட்டதாக தெரிவித்துள்ளார். பின்னர் மேற்படி வழக்கு 30.07.2013 அன்று தள்ளுபடி செய்யப்பட்டதாகவும் தனது அறிக்கையில் பேரூராட்சி செயல் அலுவலர் தெரிவித்துள்ளார்.

மேலும், இது தொடர்பாக மேற்படி இடத்தில் கழிவு நீர் சுத்திகரிப்பு நிலையம் அமைக்கக்கூடாது என சின்னக்காவணம் அருள்மிகு நூற்றெட்டீஸ்வரர் திருக்கோயில் சார்பாகவும், சின்னகாவணம் கிராம சீரமைப்பு சார்பாகவும் முதலமைச்சரின் தனிப்பிரிவிற்கு புகார்கள் தெரிவிக்கப்பட்டதாகவும் பேரூராட்சி செயல் அலுவலர் தனது அறிக்கையில் தெரிவித்துள்ளார்.

எனவே மேற்படி இடங்கள் தொடர்பாக பொதுமக்கள் கருத்துக் கேட்பு கூட்டம் 18.12.2014ல் நடத்தப்பட்டு, மேற்படி கூட்டத்தில் கழிவு நீர் சுத்திகரிப்பு நிலையம் அமைக்க தேர்வு செய்யப்பட்ட சர்வே எண் 179/6 B.1, 6B2, உள்ள இடத்தில் கழிவு நீர் சுத்திகரிப்பு நிலையம் அமைக்கக்கூடாது என பொதுமக்கள் எதிர்ப்பு தெரிவித்ததை தொடர்ந்து, மாற்று இடமாக கீழ்கண்ட இடம் தேர்வு செய்யப்பட்டு பேரூராட்சி மன்ற கூட்டத்தில் பொருள் வைத்து ஒப்புதல் பெறப்பட்டதாக தனது அறிக்கையில் தெரிவித்துள்ளார். தற்போது இந்த இடங்களுக்கு பேரூராட்சிக்கு நிலமாற்றம் செய்து வழங்கக் கோரி கருத்தரு பொன்னேரி வருவாய்க் கோட்ட அலுவலர், மற்றும் திருவள்ளூர் மாவட்ட ஆட்சித் தலைவர் ஆகியோர்களுக்கு கடிதம் அனுப்பப்பட்டு கோப்பு நடவடிக்கையில் உள்ளதாகவும் தெரிவித்துள்ளார்.

| பயன்பாடு | தேர்வு செய்யப்பட்டுள்ள இடம் | சர்வே எண் | தேவைப்படும் அளவு | நிலத்தின் வகைபாடு |
|---|---|---|---|---|
| **கழிவு நீர் சுத்திகரிப்பு நிலையம்** | கள்ளுக்கடை மேடு | 390, 399/1,3,4 | 1.70 ஏக்கர் | புறம்போக்கு |

பின்னர் பாதாள சாக்கடைத் திட்டம் செயல்படுத்துதல் தொடர்பாக 03.06.2016 அன்று அரசு செயலாளர், நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல்துறை, பேரூராட்சிகளின் இயக்குநர், டுபிசல் நிறுவன அலுவலர்கள் கலந்தாலோசித்தாகவும், பேரூராட்சியில் போதிய நிதி இல்லாததால் மேற்படி பாதாள சாக்கடை திட்டத்தினை இரண்டு கட்டமாக செயல்படுத்துவது என தீர்மானிக்கப்பட்டு முதற்கட்டமான பணிக்கு ரூ54.78 கோடியில் தமிழ்நாடு குடிநீர் வடிகால் வாரிய அலுவலர்களால் கருத்துரு சமர்ப்பிக்கப்பட்டதற்கிணங்க நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறை அரசாணை எண் 500, நாள். 29.12.2016ல் பிறப்பிக்கப்பட்டு கீழ்கண்ட விவரப்படி நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளதாக தனது அறிக்கையில் தெரிவித்துள்ளார்.

| வ.எண். | நிதி ஒதுக்கீடு விவரம் | தொகை (ரூ கோடியில்) | சதவீதம் |
|---|---|---|---|
| 1. | கடனுதவி (Loan from TNUDF) | **3.81** | **6.96%** |
| 2 | மான்யம் உள்ளாட்சி பங்கு உட்பட (Grant from IUDM) | **50.97** | **93,04%** |
| | மொத்தம் | 54.78 | 100% |

தற்போது பொன்னேரி பேரூராட்சியின் நகரப்பகுதிகள் உள்ளடக்கிய பணிகள் மற்றும் கழிவு நீர் சுத்திகரிப்பு கட்டமைப்புகள் ஆகிய பணிகளை உள்ளடக்கி முதல்கட்டமாகவும், நகரின் விரிவாக்க பகுதிகளில் மேற்காள்ளப்படும் பணிகளை திருத்திய மதிப்பீட்டின் அடிப்படையில் ஒதுக்கீடு செய்யப்படவுள்ள ரூ 21.93 கோடிக்கு இரண்டாம் கட்டமாகவும் பணிகளை மேற்கொள்ளப்படவுள்ளதாக தனது அறிக்கையில் பேரூராட்சி செயல் அலுவலர் தெரிவித்துள்ளார்.

தற்போது முதல்கட்ட பணிகளுக்கு (Phase.I) ரூ 54.78 கோடிக்கு மதிப்பீடு தயார் செய்யப்பட்டதில் ஒருங்கிணைந்த நகர்ப்புற வளர்ச்சி திட்டம் (IUDM) மூலம் ரூ 50.97 கோடி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளதாகவும் மீதமுள்ள தொகை ரூ 3.81 கோடிக்கு பொன்னேரி பேரூராட்சியால் கடன் விண்ணப்பம் தயார் செய்யப்பட்டு TNUDF அலுவலகத்திற்கு அனுப்பப்பட்டு கடன் உத்திரவு பெறப்பட்டுள்ளதாக தெரிவித்துள்ளார். தற்போது மேற்படி பணிக்கு தமிழ்நாடு குடிநீர் வடிகால் வாரியம் மூலம் ஒப்பந்தப்புள்ளி கோர கோப்பு நடவடிக்கையில் உள்ளதாகவும் செயல் அலுவலர் தனது அறிக்கையில் தெரிவித்துள்ளார்.

இந்நேர்வில் தினமலர் நாளிதழ் செய்தி 12.07.2016 ம் நாளன்று வெளியிட்ட செய்திக்கு பேரூராட்சி செயல் அலுவலர், பொன்னேரி அளித்துள்ள விளக்கம் பரிசீலிக்கப்பட்டு தற்போது மேற்படி பாதாள சாக்கடை பணி திட்டம் துவங்க தேவையான நடவடிக்கைகள் எடுக்கப்பட்டு வருவதாக தெரிவிக்கப்பட்டதை ஏற்று இம்முறைமன்ற நடுவம் இவ்வழக்கினை முடித்துவைத்து அறிவித்து அவ்வாறே ஆணையிடப்படுகிறது.'

2017-ஆம் ஆண்டு நவம்பர் திங்கள்23-ஆம் நாள் கையொப்பமிடப்பட்டு, அலுவலக முத்திரையிட்டு இவ்வாணையிடப்படுகிறது.

-//ஒப்பம்//-

**தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவர்**

-//உத்திரவின்படி - அனுப்பப்படுகிறது//-

செயலாளர்.

பெறுநர்

செயல் அலுவலர்,
பொன்னேரி தேர்வு நிலை பேரூராட்சி,
திருவள்ளூர் மாவட்டம்.